**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண். 135/2016**

**வாக்குமூலம்.பி.வா.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமணா ராவ் | தொழில் | |
| த/பெ. | ஜனார்த்தனன் ராவ் | வயது | 55 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 07.10.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

**(சாட்சியின் நிரூபணவாக்குமூலமானது ஆங்கிலத்தில் தாக்கல் செய்யப்பட்டு சாட்சியிடம் ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்கப்பட்டு தமிழிலில் பதிவு செய்யப்படுகிறது.)**

என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபணவாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ல் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **அந்த கையெழுத்து மட்டும் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.மேற்படி பி.வா.சா.ஆ.2ல் உள்ள 2வது நிரூபண சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **அது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.